வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# வள்ளுவம் வழி விழுமியங்கள்

**கி. ஜோஸ் ஆல்வின்,**
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி)*
*திருச்சிராப்பள்ளி – 02.*

**முனைவர் ஜா.பெஞ்சமின் ஆரோன் டைட்டஸ்,**
*ஆய்வு நெறியாளர் & உதவிப் பேராசிரியர்*
*தமிழாய்வுத்துறை,*
*தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி)*
*திருச்சிராப்பள்ளி – 02.*

**ஆய்வுச் சுருக்கம்**

அய்யன் வள்ளுவன் இயற்றிய திருக்குறள் ஒரு நாட்டிற்கு மட்டுமின்றி உலக அளவில் வாழ்வியல் வழிகாட்டி நூலாகத் திகழ்கிறது. உலக மக்கள் அனைவரும் பண்பாடு பெற்று உய்யும் நெறியினை எடுத்தியம்பும் ஒரு பொதுநூலாகத் திகழ்கிறது. இதில் கூறப்படாத நெறிகளை வேறு எந்த நூலிலும் காண்பது அரிது. இன்றைய உலகில் மனித நேயம் மண்மூடிப்போனதற்கு மனம் மாசுப்பட்டுப் போனதும் ஒரு காரணம் எனலாம். அந்த வகையில் திருக்குறளில் காணப்படும் விழுமியங்களைப் பற்றி விளக்கி வரைவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**கலைச் சொற்கள்**

அனிச்சம், இரவலர், குணம், சீர், சீர்மை

**முன்னுரை**

பழகு தமிழ் சொல்லருமை நாலிரண்டில் என்ற தமிழ்மகள் ஔவையாரின் கூற்று தமிழ்நாட்டில் வெகு காலமாக நிலவுகிறது. சங்கப் பெண் புலவரான ஔவையின் வழியிலும், வள்ளுவரின் வழியிலும் வாழ்க்கைக்கான அறத்தைக் காணமுடிகிறது. வாழ்க்கையில் மேம்பட வள்ளுவரின் வழியைப் பின்பற்றினால் வரும் நன்மைகளை இக்கட்டுரை வழி காண்போம்.

**விழுமியம் விளக்கம்**

விழுமியம் என்பது தனிமனிதனுடைய கடமைகள், கட்டுப்பாடுகளின் தொகுப்புநெறிகள் அல்லது மதிப்புகள் ஆகியவையே விழுமியங்கள் ஆகும்.

குடும்பத்தில் மகிழ்ச்சியும் அமைதியும் பெற வேண்டுமென்றால் ஒவ்வொருவரும் தமக்கென சில கடமைகளையும், கட்டுப்பாடுகளையும் வகுத்துக் கொள்ள வேண்டும். இந்தக் கட்டுப்பாடு, கடமைகள் தான் விழுமியங்களாக எடுத்துரைக்கப்படுகின்றன. ஒருவரின் வாழ்வை

மதிப்பீடு (Value) செய்வதற்கு அவனுடைய உயர்ந்த பண்புகள், ஒழுக்கநெறிகள் அறியப்படுகிறது இதனையே,

**"பிறர் உனக்கு எதைச் செய்ய வேண்டும் என்று நீ நினைக்கிறாயோ?**
**அதனை நீ பிறருக்கு செய்ய வேண்டும்"**

என்ற விவிலிய வரிகளுக்கு ஏற்ப விழுமியங்கள் சமுதாயத்தில் ஏற்படும் மாற்றத்திற்கு ஏற்ப அந்தந்தக் காலத்திற்கு ஏற்றார் போல் உருவாகியுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**விழுமியம் என்பதன் பொருள்**

விழுமியம் என்ற சொல்லுக்குத் தமிழில் மேலான, உயர்ந்த, மதிப்பு, நன்மை என்று பல பொருள்கள் உள்ளன. யாழ்ப்பாண அகராதியும் கதிர்வேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதியும் விழுமியம் என்னும் சொல்லுக்கு இடும்பை, சிறப்பு, சீர்மை, நன்மை எனப் பொருள் கூறுகிறது.

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தமிழ் - ஆங்கில அகராதி விழுமியம் என்ற சொல்லுக்கு இடும்பை(Poverty)இ சிறப்பு(Oranament)இ சீர்மை(Good State or Condition) நன்மை(What is Good) எனச் சுட்டுகிறது. கலைச்சொல் பேரகராதி Value என்ற ஆங்கிலச் சொல்லிற்குத் தரும் விளக்கம் மதிப்பு, விழுமியம், பெரமானம் எனப் பொருள் கூறுகிறது.

மூவர் தேவாரச் சொல்லகராதி விழுமியம் என்னும் சொல்லுக்கு குணம், சீர் எனப் பொருள் சுட்டுகிறது. க்ரியாவின் தற்கால அகராதி விழுமியம் என்னும் சொல்லுக்கு மதிப்பு(Value) சிறந்த, உயர்வான எனப் பொருள் கூறுகிறது.

**சங்க இலக்கியத்தில் விழுமியம் - சொல்லாட்சி**

சங்க இலக்கியங்களில் விழுமியம் என்கின்ற சொல்லாட்சியைக் காணமுடிகின்றது. இதனை,

**"எழில் மாமேனி மகளிர்**
**விழுமாந்தனர் தம் கொழுநரைக் காத்தே"[1] (நற்.ப.எ.182)**

என நற்றினைச் செய்யுளிலும்,

**"விழுமத்தின் புகழும் பெயரா ஆண்மை**
**காஞ்சி சான்ற வயவர் பெரும"[2] (பதிற்.ப.எ.94)**

என பதிற்றுப்பத்திலும்,

**"வேந்தரு விழுமம் தாங்கிய**
**பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே"[3] (புறம்.ப.எ.82)**

ஏனப் புறநானூற்று வழியாகவும் அறிய முடிகின்றது.

**அன்புடைமை**

காலத்தின் பொருளையும் பிறருக்குத் தேவைப்படும் போது கொடுக்கும் தன்மையே அன்பின் அடிப்படை இது அகத்தே உணரும் மென்மையான உணர்வு இதற்கு புறவடிவம் இல்லை வார்த்தைகளால் வருணிக்க முடியாது உருவம் இல்லாத உணர்வு, இவ்வுலகில் பிறவி

எடுத்ததன் பயன் வாழ்வாங்கு வாழ்ந்து உடலும் உயிரும் சிறப்படைவது அன்பினாலே. மேலும் இந்த மனித உலகத்தை இணைத்து வாழச் செய்யும் அற்புத சக்தி அன்புக்கே உண்டு. விண்ணையும் மண்ணையும் இணைக்கும் பேராற்றல் அன்புக்கே உண்டு. வள்ளுவர் இத்தகைய அன்பினை

**“அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு”[4] (குறள்.72)**

என்றும், அன்பில்லாதவர்கள் எல்லாப் பொருட்களும் தமக்கே சொந்தம் என்று சொல்லி உரிமை கொண்டாடுவார்கள். அன்புள்ளவர்கள் தம் உயிரும் உடம்பும்கூட மற்றவர்க்காக என்று வாழ்வார்கள் என குறள் கூறுகிறது.

சமுதாயம் முன்னேற வேண்டுமானால் மனிதனிடம் உள்ள தீய குணங்கள் நீங்கி பிற உயிர்களிடத்தில் அன்பு காட்ட வேண்டும். அன்புதான் மனிதனை மனிதனாக்குகிறது. அன்பு வழியைப் பின்பற்றினால் நாம் எத்தகைய துன்பத்தையும் வென்றிடலாம். அத்தகைய அன்பில்லாத ஒருவனை வள்ளுவர் எழும்புக் கூட்டின் மீது தோலால் போர்த்தப்பட்ட வெற்று உடம்பு என்கிறார்.

**“அன்பின் வழியது உயிர்நிலை அ∴திலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு”[5] (குறள்.80)**

என்னும் குறள் வழி தெளிவாகிறது.

**கல்வி**

கல் என்னும் அடிச்சொல்லின் வழியாக கல்வி என்ற சொல் பிறந்தது. ‘கல்’ என்பது ‘தோண்டுதல்’, ‘கல்லுதல்’ என்னும் பொருளை அளிப்பதாக அமைந்துள்ளது. மனிதனிடம் புதைந்து கிடைக்கும் ஆற்றல்களையும், திறன்களையும் வெளிக்கொணர்ந்து மலர்ந்திடச் செய்யும் செயலே கல்வி.

கல்வி இன்றைய வாழ்க்கைக்கு அவசியமான ஒன்று ஆகும். ஆதலால் அனைவரும் கல்வி கற்க வேண்டும். கற்கும் நூல்களை குற்றமறக் கற்க வேண்டும். அவ்வாறு கற்ற பிறகு அதனை தன் வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டும் என்கிறார்.

**“கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக”[6] (குறள்.391)**

அவ்வாறு குற்றமற கற்கும் கல்வியே நம் அறியாமை இருளை நோக்கும்.

நாட்டின் எதிர்காலம் இளைஞர்கள் கையில்தான் உள்ளது. இளைஞர்களை நல்லவர்களாகவும் சிறந்தவர்களாகவும் உருவாக்க கல்வி மிகவும் அவசியம். கல்விச்செல்வமே நிலையான செல்வம் ஆகும். இதனையே வள்ளுவர்,

**“கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்ற யவை”[7] (குறள்.400)**

பொருட்செல்வம் வெள்ளத்தாலும் வெந்தழலாலும் அழியக் கூடியது. கள்வர்களால் கவர்ந்து செல்லக்கூடியது. பிறருக்குக் கொடுத்தால் குறையும் தன்மை வாய்ந்தது. கல்விச் செல்வமோ பிறருக்குக் கொடுக்கக் கொடுக்க வளரும் தன்மையுடையது. அதனால் தான் கல்வியைக் 'கேடில் விழுச்செல்வம்' என்று கூறுகின்றார்.

**ஒழுக்கம்**

மக்கள் அனைவரும் ஒழுக்கத்தோடு வாழ வேண்டும் ஒழுக்கத்தோடு வாழ்ந்தால் அவர்கள் மேன்மை அடைவார்கள். அதனால்தான் ஒழுக்கம் உயிரைவிடச் சிறந்ததாகப் போற்றப்படுகிறது. ஒழுக்கம் இல்லாதவனுடைய வாழ்வில் உயர்வு இருக்காது. ஆகையால் எல்லோரும் ஒழுக்கத்தோடு வாழ வேண்டும் என்று விரும்பியவர்,

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப்படும்"[8]** (குறள்.131)

நல்லொழுக்கம் இன்பமான நல்வாழ்விற்குத் துணையாகும். தீயொழுக்கம் எப்போதும் துன்பத்தைத்தான் கொடுக்கும் என்பதை,

**"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்**
**என்றும் இடும்பைத் தரும்"[9]** (குறள்.138)

இக்குறளின் வழி அறிவுறுத்துகின்றனர். எல்லா மக்களும் ஒழுக்க நெறியிலிருந்து தவறாமல் வாழவேண்டும்.

**விருந்தோம்பல்**

பண்டைத் தமிழ்நாட்டில் இல்லற வாழ்க்கையின் முதன்மை கடமைகளுள் ஒன்றாக விருந்தோம்பல் கருதப்பட்டது. கணவனும் மனைவியும் இணைந்துதான் அக்கடனை நிறைவேற்ற முடியும் என்றும் அறிந்திருந்தார்கள். கோவலன் தன்னை விட்டுப் பிரிந்ததனால் இல்லறக் கடன்களுள் ஒன்றாகிய விருந்தோம்பலை ஆற்ற இயலவில்லை எனக் கண்ணகி கோவலனிடம் மதுரையில் கூறி வருந்தியதை சிலப்பதிகாரம் எடுத்துரைக்கிறது. இதனையே திருவள்ளுவர்,

**"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"[10]** (குறள்.81)

இல்லற வாழ்க்கையை இனிதே நடத்துபவர்கள்தான் நிலை பெற்ற வாழ்க்கையுடையவர்கள் ஆவார்கள். அவர்கள் அறநெறியின் வழி இல்லறத்தை நடத்துவதே விருந்தினரைப் போற்றி அவர்கட்கு உதவி செய்தவற்குத்தான். பிறருக்கு உதவி செய்யும் விருந்தோம்பலைக் கடைப்பிடிக்கவில்லையானால் இல்லறத்தால் பயனில்லை. சுருங்கக் கூறின் விருந்தோம்பலினால் சக மனித அன்பு பெருகுகிறது எனலாம்.

**செய்ந்நன்றியறிதல்**

எத்தகைய அறத்தை அழித்தவர்களும் அப்பாவத்திலிருந்து தப்புவதற்கு வழியுண்டு. ஆனால் செய்ந்நன்றி கொன்றவர்கள் தப்புவதற்கு வழியேயில்லை என்று வள்ளுவர் கூறுவதனை

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**

**செய்ந்நன்றி கொன்ற மகற்கு”[11]** (குறள்.110)

என்பதற்கேற்ப செய்நன்றியைக் காப்பதற்காக தன் உயிரையே பணயமாக வைத்துக குறள் வழி கர்ணன், கும்பகர்ணனும் வாழ்ந்தான்.

உதவி வேண்டி நின்ற காலத்தில் தப்பாது செய்த உதவி சிறியதாக இருந்தாலும் செய்யப்பட்ட காலத்தை மனதில் கொண்டு ஆராய்ந்து பார்த்தால் நில உலகத்தை விட மிகப்பெரியதாம் என்பதனை

**“காலத்தினாற் செய்த உதவி சிறிது எனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது”[12]** (குறள்.102)

என்னும் குறள் நன்றியின் நலத்தைப் புலப்படுத்துகிறது.

**நட்பு**

உண்மையான நண்பனை ஆபத்துக்காலத்தில் அடையாளம் கண்டு கொள்ளலாம். எனவேதான் ‘அருமை சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்’ என்னும் பழமொழியை முன்னோர் வழங்கி வந்தனர். இதனை வள்ளுவர்

**“உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே**
**இடுக்கண் களைவது ஆம் நட்பு”[13]** (குறள்.788)

என்னும் குறளில் விளக்குகின்றார். அதாவது நல்ல நண்பன் என்பவன் துன்பம் வந்த காலத்தில் எவ்விதம் உதவுவானெனில் இடுப்பிலுள்ள ஆடை நழுவி விட்டபோது, ஒருவனுடைய கை அவனை அறியாமல் மானம் காக்க சரி செய்வது போல நண்பனுக்குத் துன்பம் வந்ததை அறிந்த அக்கணமே அத்துன்பத்தை தீர்த்து விடுவான். அத்தகைய நட்பே மிகச் சிறந்த நட்பாகும்.

‘அகத்தின் அழகு முகத்தில் தெரியும்’ என்ற பழமொழிக்கிணங்க உள்ளத்தைக் காட்டும் கண்ணாடியான முக இயல்பைக் கொண்டே ஓரளவு அறிந்து கொள்ளலாம்.

**“முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகநக நட்பது நட்பு”[14]** (குறள்.786)

அதாவது முகம் மலருவதுடன் நெஞ்சமும் ஒத்து மகிழும் உறவே உண்மை நட்பு என்கின்றது வள்ளுவம்.

**துன்பம் விழையாமை**

ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் என்கிறது சிலப்பதிகாரம். ஒருவருக்கு முன்னொரு காலத்தில் நாம் துன்பம் செய்தோமென்றால், பிற்காலத்தில் அத்துன்பங்கள் தாமாகவே நம்மை வந்து சேரும். எந்த ஒரு காலத்திலும் யாருக்கும் மனதளவில் கூட துன்பங்கள் செய்யக்கூடாது.

**“பிறர்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா**
**பிற்பகல் தாமே வரும்”[15]** (குறள்.319)

**“எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்**
**மாணா செய்யாமை தலை”[16]** (குறள்.317)

எந்த ஒரு உயிர்க்கும் எப்பொழுதும் எக்காலத்தும் துன்பங்கள் செய்யக்கூடாது என்று அறிவுறுறுத்துகின்றார்.

**ஈகை**

ஈயும் நல்லியல்பு உள்ளவர்கள் பிறர்க்கு ஈதலையே ஈகை என்கின்றோம். இவ்ஈகை குறித்துஈகை மனம் உவந்து வழங்கப்படும் பொருள் உதவி, கொடை என்று க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி விளக்கம் தருகின்றது. ஈகை என்பது ஒரு மனிதனின் பண்பை மதிப்பிடுவதில் குறிப்பிடதக்க இடத்தைப் பெறுகின்றது இதைனை,

**"வறியார்க்கொன் றீவதே ஈகை மற்றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீர துடைத்து"[17] (குறள்.221)**

வறியவர்களுக்கு ஈவதே ஈகை பண்பாகும். வறியவர் அல்லாத பிறர்க்குக் கொடுப்பதெல்லாம் ஏதோவொரு பயனை எதிர்பார்த்துக் கொடுப்பதற்குச் சமம் என்று ஈகைக்கு இலக்கணம் வகுத்தவர் வள்ளுவர். ஆகவே ஈகை என்னும் சிறந்த அறத்தை வாழ்க்கையின் ஓர் உயரிய பண்பாகக் கைகொள்ள வேண்டும்.

**முடிவுரை**

திருக்குறள் வாழ்வியல் விழுமியங்களின் களஞ்சியமாகக் திகழ்கிறது. மனிதர்கள் வாழ்வில் எவ்விதத் துன்பமுமின்றி வாழ வேண்டுமென்றால் இன்னாசெய்யாமை, உயிர் கொல்லாமை, செய்நன்றி அறிதல், ஒழுக்கம், அன்பு, கல்வி, விருந்தோம்பல், நட்பு இதுபோன்ற அறச்செயல்கள் என்ன என்பதை அறிந்துகொண்டு அதன்வழி நடக்க வேண்டும். மனிதர்களுக்கு மனிதர்கள் நேசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். வள்ளுவர் வகுத்துக் காட்டும் வாழ்வியல் நெறிகளின்படி வாழும் வாழ்வே சிறந்த வாழ்வு என்பதில் ஐயமில்லை.

**சான்றெண் விளக்கம்**


1. கதிர். மகாதேவன் (உ.ஆ), நற்றிணை, ப.182,
2. அ.மா.பரிமணம் (உ.ஆ), பதிற்றுப்பத்து, ப.94,
3. இரா. இளங்குமரன் (உ.ஆ), புறநானூறு, ப82,
4. பரிமேலழகர் (உ.ஆ), திருக்குறள், ப.29,
5. மேலது, ப.31,
6. மேலது, ப.128,
7. மேலது, ப.125,
8. மேலது, ப.45,
9. நீ. தங்கவேலன் (உ.ஆ), திருக்குறள், ப.62,
10. மேலது, ப.39,
11. மேலது, ப.50,
12. மேலது, ப.47,
13. மேலது, ப.321,
14. இரா. இளங்குமரன் (உ.ஆ), திருக்குறள், ப.160
15. மேலது, ப.64,
16. மேலது, ப.64,
17. மேலது, ப.46,

**துணைநூற்பட்டியல்**


1. இளங்குமரனார்.இரா(உ.ஆ), திருக்குறள், திருவள்ளுவர் நிலையம், மதுரை, முதற்பதிப்பு, 2020
2. கதிரைவேற்பிள்ளை தமிழ்மொழியகராதி, ஏசியன் கல்வியியல் சர்வீஸ் நியூடில்லி, சென்னை, ஆறாவது பதிப்பு, 1981
3. கலைச்சொல்லாக்கக் குழு, கலைச்சொல் பேரகராதி, தமிழ்மண் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2008
4. சந்திரசேகரப் பண்டிதர், யாழ்ப்பாண அகராதி தொகுதி 2, தமிழ்மண் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2005
5. தங்கவேலன்.நீ(உ.ஆ), திருக்குறள் கருத்துரை, ஸ்ரீ பாரதி புத்தகாலயம், சென்னை, முதற்பதிப்பு, 2017
6. பரிமேலழகர்(உ.ஆ), திருக்குறள், சாரதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2009